செ.வெ.எண்: 735 நாள்: 31.10.2019

**புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

---

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.10.2019) நேரில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்கு பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கிராமப்புறங்களில் உள்ள பொது மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ரொக்கப் பதிவேடுகள், வருகை பதிவேடு, பசுமை வீடு திட்ட மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேடுகள், பட்டியல் அனுமதிக்கும் பதிவேடுகள், அம்மா இரு சக்கர வாகன விண்ணப்பப் பதிவேடு, அனுப்புகை பிரிவு பதிவேடுகள், இருக்கை பிரிவு பதிவேடு, ஊதிய உயர்வு தொடர்பான பதிவேடுகள் உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை முறையாக பராமரிக்கவும், பொது மக்களுக்கு தேவையான அம்மா இரு சக்கர வாகனம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தாமதமின்றி விரைவாக வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சதாசிவம், தமிழ்செல்வன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**